சந்தித்தோம்.

முதலில் நம்மிடம் பேசிய சிலை அமைப்புக் குழுவின் செயலாளர் ராஜேந்திரன், "அம்பேத்கர் ஒரு தேசியத் தலைவராக இருப்பதால் ஒரு சமூகம் சார்ந்த விழாவாக இருக்கக் கூடாது என்று முடிவு செய்தோம். அந்த அடிப்படையில்தான் மத்தியிலிருந்து ப.சிதம்பரம், மாநிலத்திலிருந்து துணை முதல்வர் ஸ்டாலினை அழைப்பது என்று முடிவு செய்தோம். அப்படி ஸ்டாலினை அழைப்பது என்றால் தி.மு.க.வில் ஒரு புரோட்டோக்கால் இருக்கு. மாவட்டச் செயலாளர் மூலம்தான் அணுக முடியும். அதனால் சிவகங்கை மாவட்ட தி.மு.க. செயலாளரும், அமைச்சருமான பெரியகருப்பனை சந்தித்துச் சொன்னோம். ஆனால் அமைச்சரோ, 'காரைக்குடியில் தேவர் சிலையை ஸ்டாலின் திறந்ததால் நீங்களும் அவரை வைத்து அம்பேத்கர் சிலையைத் திறக்கணுமின்னு கேட்குறீங்களா?' என்றவர் மேலும், 'இப்ப அவரால வர முடியாது. அவர் ரொம்ப பிஸி' என்றார். உடனே நாங்களும், '6ஆம் தேதி கும்பகோணத்திற்கு வருகிறார். தஞ்சாவூரிலிருந்து காரைக்குடி வர 2 மணி நேரம்தான் ஆகும். அப்படியில்லாவிட்டாலும் அதற்கடுத்த வாரம் ஆர்.எஸ். மங்களம் வருவதாகச் சொல்கிறார்கள். அந்த சமயத்தில் கூட அழைத்து வாருங்கள்' என்று சொன்னோம். ஆனால் பெரியகருப்பனோ, 'வேணுமின்னா நீங்களே போய் அவரைக் கூப்பிட்டுக்குங்க' என்று கோபமாகச் சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டார்.

அதன் பிறகுதான் 12ஆம் தேதி என உள்துறை அமைச்சர் தேதி கொடுத்து சிலை திறக்கப்பட்டது. தேசியக் கொள்கையிலிருந்து அம்பேத்கரையும் சிதம்பரத்தையும் பிரிச்சுப் பார்க்கல. அம்பேத்கரின் அறிவு சார்ந்த விஷயங்களை சட்டம் படித்த சிதம்பரம் உள்வாங்கியிருக்கிறார். அந்த அடிப்படையில் சிலையை சிதம்பரம் திறந்து வைத்தது எங்களுக்கும் பெருமைதான். அதேபோல ஸ்டாலினும் வந்திருக்கணும். ஸ்டாலின் வராததால் எங்களுடைய கோரிக்கையைக் கூட சொல்ல முடியல" என்கிறார்.


மணிமுத்து


ராஜேந்திரன்

அடுத்து நம்மிடம் பேசிய அம்பேத்கர் மக்கள் கட்டமைப்பின் செயலாளர் சிம்சன், "தி.மு.க. ஒரு சார்பாக இருப்பதாகவே தென்படுகிறது. ஏற்கெனவே முத்துராமலிங்கத் தேவர் நூற்றாண்டு விழாவில் முதலமைச்சர் கலந்து கொண்டார். அடுத்து மதுரையில் மருதுபாண்டியர்கள் சிலையையும் அவரே திறந்து வைத்தார். கடந்த 6ஆம் தேதி கும்பகோணத்தில் தேவர் சிலையைத் துணை முதல்வர் திறந்துள்ளார். இப்படி தென் மாவட்டத்தில் பரவலாக உள்ள தேவர் சமுதாயத்தினரைத் திருப்திப்படுத்தும் விதமாகவே தி.மு.க. நடந்துகொள்கிறது. அதே சமயம் அதே எதிர்பார்ப்பு தலித் மக்களிடமும் உள்ளது. காரைக்குடியில் அம்பேத்கர் சிலைக்கான முழுச் செலவையும் அமைச்சர் பெரியகருப்பன் ஏற்றுக்கெண்டார் என்பது பெருமைக்குரிய விஷயம். அதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் 6ஆம் தேதி கும்பகோணமும் அடுத்து ஆர்.எஸ்.மங்களமும் வந்திருந்த ஸ்டாலினை, பெரியகருப்பன் காரைக்குடிக்கு ஏன் கூட்டி வரவில்லை? தலித் சமூகத்தைப் பொருட்படுத்தாத போக்கு எல்லா அரசியல் கட்சிகளிலும் இருக்கு. அதில் தி.மு.க.வை மட்டும் விதிவிலக்காகப் பார்க்க முடியல. இதற்கு மூலகாரணமே ஓட்டு அரசியல்தான். யார் பக்கம் அதிக ஓட்டு இருக்கிறதோ அந்த சமூகம் சார்ந்தே அரசியல் கட்சிகளும் இருக்க விரும்புகின்றன. 'அ.தி.மு.க. என்பது முக்குலத்தோர் கட்சி' என்று வெளிப்படையாகவே சொல்லப்படுகிறது. இந்த நிலையில் முத்துராமலிங்கத் தேவரின் நூற்றாண்டு விழாவுக்குப் பிறகு தி.மு.க. தேவர் சமூக நலனைக் கருதியே செயல்படுகிறது. அ.தி.மு.க.வை பலவீனப்படுத்த வேண்டும் என்பது தி.மு.க.வின் உள்ளார்ந்த திட்டம். அம்பேத்கர் சிலையைத் திறந்தால் அது முக்குலத்தோர் மத்தியில் வெறுப்பை உண்டாக்கும் என்று எண்ணியே ஸ்டாலின் வரவில்லை என்கிற ஐயப்பாடு எங்களுக்கு இருக்கிறது. இந்த நிகழ்ச்சியில் ஸ்டாலின் பங்கேற்றிருந்தால் அது ஒரு தலித் அல்லாதோரும் பங்கேற்ற நிகழ்ச்சியாக இருந்திருக்கும். ஆனால் அமைச்சர்கள் தமிழரசி, மதிவாணன், துணை சபாநாயகர் வி.பி.துரைசாமி என தலித்களையே அனுப்பியிருக்கிறார்கள். இவர்களை அழைத்து வந்த பெரியகருப்பன் ஏன் பக்கத்து மாவட்டத்திலிருந்து சுப. தங்கவேலனையோ, தங்கம் தென்னரசுவையோ அழைத்து வரவில்லை?" என்று கேள்வி எழுப்பினார்.

"தி.மு.க. முதன் முதலில் ஆட்சிப்